

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தாதகாபட்டி பகுதி தி.மு.க.சார்பில் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர். எஸ். ஆர். சிவலிங்கம். தலைமை செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன். தாமரைக்கண்ணன். மாநகர நிர்வாகிகள். பா.ரகுபதி.கணேசன். ஷெரிப். பகுதி செயலாளர். ஏ.எஸ். சரவணன்.(தாதகாபட்டி ) தனசேகரன், ஜெய்.ராஜா, முருகன். சி.பிரகாஷ், உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை,ஜூலை.10-

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாள் விழாவாக கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு : தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன், தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர், அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர், களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர், இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்த தான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” 11.07.2025, வெள்ளிக்கிழமை அன்று காலை 08.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் நடைபெற உள்ளது. இம்முகாமில் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

அதுசமயம், இந்நிகழ்வில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர், மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், பகுதிக் கழகச் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், பாக முகவர்கள் (BLA 2) , பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




பம்மல் வடக்குப் பகுதியில் பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் தலைமையில் ”ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கையை தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி சிறப்புரை ஆற்றி தொடங்கி வைத்தார்.



ஓரணியில் தமிழ்நாடு மற்றும் மெட்ராஸ் TO சென்னை வளர்ச்சி குறித்து வாகனத்தின் மூலம் தெருக்களில் விளக்கவுரை வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில் 122வது வட்டத்தில் ஆழ்வார்பேட்டை தெரு திருவள்ளுவர் சாலை சந்திப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பபாளர் விஜய் வெங்கடேசன், ஜி.ஆர். ராஜேந்திரன், பி.எஸ்.ஆறுமுகம், ஆகியோர் ஓரணியில் தமிழ்நாடு மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் 122வது வட்ட, மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அச்சிறுப்பாக்கம் வடக்கு பகுதியில் கிளியா நகரில், ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை நிகழ்ச்சியில் மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி, மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கையை ஆய்வு செய்தனர். அருகில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜீ.தம்பு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க. பொதுச் செயலாளர்

# எடப்பாடியா? அமித்ஷாவா?

வியூகம் அமைப்பதில் வித்தகர் என்ற நினைப்பு அமித்ஷாவிற்கு உண்டு. அதற்கு காரணம் அவருக்கு உதவிட சில புல்லுருவிகளும் எட்டப்பர்களும் இருப்பது தான். உதாரணத்திற்கு ஏக்நாத்ஷிண்டே போல் அ.தி.மு.கவில் யாரோ ஒரு சில ஷிண்டேக்கள் அமித்ஷாவிற்கு கிடைத்திருக்கிறார்கள். அதனால் தான் கூட்டணி ஆட்சி என்று திரும்ப திரும்பக் கூறிவருகிறார்.

இந்து முன்னணி நடத்திய முருகன் மாநாட்டில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவை அவமதித்து வீடியோ வெளியிட்டதை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ரசித்து கைதட்டியது நியாயமா என்று தான் கேட்டோம். இதில் என்ன தவறு இருக்கிறது?

உடனே எடப்பாடியார் அண்ணாவைப் பற்றி எங்களுக்கு யாரும்கூறத்தேவையில்லைஎன்றுஆவேசம்உச்சந்தலைக்கு ஏறிடக் குமுறி இருக்கிறார். அந்த வீடியோவை கண்டித்து அவரது முன்னாள் அமைச்சர்கள் வெளிநடப்பு செய்திருந்தால் நாம் ஏன் இந்த கேள்வியை எழுப்பப் போகிறோம்?

எடப்பாடியாரே! அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்க வரலாற்றை பாதி நான் எழுதி விட்டேன் மீதி வரலாற்றை என் தம்பி கருணாநிதி எழுதுவார் என்றாரே அப்போது என்ன அண்ணா விரைவில் உயிரிழக்கப் போகிறோம் என்றா நினைத்துச் சொன்னார். கலைஞர் திறமை மீது இருந்த நம்பிக்கை அப்படி அண்ணாவைச் சொல்ல வைத்தது. தம்பி வா என்று எந்த நாவலரை அண்ணா அழைத்தாரோ அந்த நாவலர் எழுதுவார் என்று கூறவில்லையே! ஏன் புரட்சி நடிகர் என்று கலைஞரால் இதயப்பூர்வமாக பட்டம் சூட்டப்பட்ட எம்.ஜி.ஆர் எழுதுவார் என்று கூறவில்லையே!

அதேபோல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1965ல் கொழுந்து விட்டு எரிந்த போது மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று யாரை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர்? கலைஞர் அவர்களைத் தானே!

அறிஞர் அண்ணாவிடம் நீங்கள் பார்க்க விரும்பும் இடம் எது என்று கேட்ட போது நான் பார்க்க விரும்பும் யாத்திரை ஸ்தலம் என் தம்பி கருணாநிதி அடைக்கப்பட்டிருக்கிறாரே அந்தப் பாளையங்கோட்டை சிறை என்று தானே கூறினார். இதாவது எடப்பாடியாரே உங்களுக்கு தெரியுமா? தெரிந்து கொள்ளுங்கள். பிறகு ஆவேசப்படமாட்டீர்கள்.

கல்லக்குடிப் போராட்டத்தில் கலந்துகொண்டு டால்மியாபுரம் என்ற பெயரை அழித்துவிட்டு கல்லக்குடி என்று மட்டும் எழுத வேண்டுமென அறிஞர் அண்ணா கூறியது யார் யாரிடம்? முதலில் கலைஞர் பிறகு பெரியவர் இராமசுப்பையா அதன் பிறகு கவியரசு கண்ணதாசன் என்ற மூவரிடம் தான். எம்.ஜி. ஆரிடம் கூறவில்லையே! பெரியவர் இராமசுப்பையா, இயக்குனர் எஸ்.பி.முத்துராமன், சுப. வீரபாண்டியன் தந்தை.

அதில் கலைஞர் கலந்து கொண்டு டால்மியாபுரத்தை தார்பூசி அழித்துவிட்டு சற்றுக் கூடுதலாக ஓட இருந்த ரயிலின் முன் தண்டவாளத்தில் தன் தலையை வைத்து படுத்து இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று கோஷமிட்டவர் யார்? கலைஞர் தானே! ஒருவேளை ரயில் சற்று உருண்டிருந்தால் அன்றைக்கே கலைஞர் நம்மை விட்டுப் போயிருப்பார். இப்படி உயிரைச் துச்சமென நினைத்த கலைஞர் செய்தச் செயலை அண்ணா அவர்கள் கண்டித்தார். இவையெல்லாம் உங்களுக்குத் தெரியுமா?



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய
அணிச் செயலாளர்

நல்லவேளை அண்ணா பெயரில் உள்ள கட்சியின் பொதுச்செயலாளரான நீங்கள் குறைந்தபட்சம் முருகன் மாநாட்டில் வெளியிட்ட அண்ணாப் பற்றிய இழிவான வீடியோவை கண்டித்துள்ளீர்கள். அதற்காகப் பாராட்டத் தான் வேண்டியுள்ளது.

அறிஞர் அண்ணா எங்கள் தலைவர் எம்.ஜி.ஆரை இதயக்கனி என்று சொல்லவில்லையா என்று நீங்கள் கேட்பதும் எங்கள் காதுகளில் விழத்தான் செய்கிறது. தி.மு.க விற்காக அவர் உழைத்தவர் தான். அதனால் தான் எம்.எல்.சி. ஆனார். எம்.எல்.ஏ ஆனார் ஏன். தி.மு.கவின் பொருளாளராகவும் ஆனார்.

கட்சிப் பொருளாளராக அவரே இருந்து கொண்டு கணக்கு வழக்கெல்லாம் தானே வைத்திருந்த எம்.ஜி.ஆர் யாரைப் பார்த்துக் கணக்கு கேட்டார்? அப்படி அவர் கேட்டது நியாயமா? உலகில் கணக்கு வைத்திருந்தவரே கணக்கு கேட்டது எம்.ஜி. ஆராக மட்டும் தான் இருக்குமுடியும்.

அப்படி கணக்குக் கேட்டப் போது அவரை அழைத்து விசாரிக்க வேண்டும் விளக்கம் கேட்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் தலைமை கழக நிர்வாகிகளோடு விவாதித்துக் கொண்டிருந்த சமயம் எங்கே எம்.ஜி.ஆரை நீக்காமல் விட்டுவிடுவார்களோ என்று கூட்டத்திலிருந்து வெளியேறி என்.வி.என்னை அழைத்துக் கொண்டு காத்திருந்த பத்திரிகையாளர்களிடம் எம்.ஜி.ஆரை கட்சியிலிருந்து நீக்கி விட்டோம் என்று கூறியது யார்? நாவலர் தானே!

ஏன் அவசரப்பட்டீர்கள் என்று கலைஞர் அவர்கள் நாவலரிடம் கேட்டபோது ஆமாம் நீங்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சைக் கேட்டால் எம்.ஜி.ஆரை நீக்க மாட்டீர்கள் போல் தெரிந்தது. அதனால் தான் நான் போய் அப்படி கூறினேன் என்று நாவலர் கூறியதை இல்லையென்று உங்களால் கூற முடியுமா? அதற்கும் ஒரு காரணம் உண்டு. நாவலர் முதலமைச்சராக ஆசைப்பட்ட போது எம்.ஜி.ஆர் அவருக்கு ஆதரவளிக்கவில்லை என்ற கோபம். அதே நாவலர் தி.மு. கவிலிருந்து விலகி மக்கள் தி.மு.க ஆரம்பித்தார். டெபாசிட் கூட வாங்க முடியவில்லை. எந்த எம்.ஜி.ஆரைப் பார்த்து நடிகனால் நாடாள முடியுமா? என்று கேட்ட அதே நாவலர் கடைசியில் அவரிடமே தஞ்சமடைந்து பதவி சுகம் அனுபவித்தார்.

எம்.ஜி.ஆர் தி.மு.கவில் சேர்ந்தது 1953ல் தான். அதற்கு முன்பே அண்ணா கதை எழுத கலைஞர் கதை எழுத அந்த நாடகங்களிலெல்லாம் நடித்து கழகத்திற்கு நிதி சேர்க்க உதவியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் என்பதாவது தெரியுமா?

அறிஞர் அண்ணா அருமையான ஒரு கதையை எழுதிவிட்டார். எம்.ஜி.ஆரை அண்ணாவிடம் அறிமுகப்படுத்தியவர் எஸ்.எஸ்.ஆர் மைத்துனர் நடிகமணி நாராயணசாமி ஆவார். அப்போது சுயமரியாதை மாநாடு நடக்க இருக்கிறது. அதில் எம்.ஜி.ஆரை பார்த்த அண்ணா அவர்கள் அவர் எழுதிய நாடக வசனத்தைக் கொடுத்து இந்த நாடகத்தைப் பார்ப்பதற்கு நாடகமே அரிதாக பார்க்கும் (தந்தை பெரியார்) அய்யா வர ஒத்துக் கொண்டுள்ளார். அதுவும் 10 நிமிடம் தான் பார்ப்பார் எனவே ஏற்கனவே நீங்கள் நாடகத்தில் நடித்த அனுபவம் வாய்ந்தவர் என்று நடிகமணி கூறியுள்ளார். நன்றாக படித்து நடியுங்கள் என்று அண்ணா கூறுகிறார்.

அறிஞர் அண்ணாவின் வசனத்தை எப்படி பேசி நடிக்க முடியும் என்று எம்.ஜி.ஆர் தனது அண்ணன் எம்.ஜி. சக்கரபாணியிடம் கலந்தலோசித்துள்ளார். சக்கரபாணி வேண்டாம் தவிர்த்து விடு என்று கூற எம்.ஜி.ஆர் அண்ணாவிடம் சென்று வசனங்களில் சில திருத்தங்கள் செய்து கொள்ளவா என்று கேட்டிருக்கிறார். அண்ணாவோ உங்களுக்கு சிரமமாக இருந்தால் திருத்திக் கொள்ளுங்கள் என்கிறார். எத்தனைப் பக்கத்தை அவர் திருத்துவார்? 90 பக்கங்களையும் திருத்த முடியாமல் எம்.ஜி.ஆர் திடீரென்று ஒதுங்கிக் கொள்கிறார். அவரைக் குறைத்து மதிப்பிட எழுதப்பட வில்லை. உண்மை வரலாற்றைத் தான் எழுதியுள்ளேன்.

அதன் பிறகு அண்ணாவிடம் நடிகமணி வந்து எம்.ஜி.ஆர் நடிக்காமல் ஒதுங்கி விட்டார் என்று கூறினார். உடனே அண்ணா சற்றும் தயங்காமல் தன் வீட்டிலிருந்த கணேசனை அழைத்து இந்தா இந்த வசனத்தை நீ பேசி நடி! உன்னால் முடியும்! அய்யா வருகிறாரென்று கூறியுள்ளார். 10 நிமிடம் இருப்பார் பார்த்து நடி என்று கூறிவிட்டு செல்கிறார். இடையில் ஒரு நாள் மட்டுமே உள்ளது.

அண்ணா மாலை வருகிறார். என்ன கணேசா படித்தாயா முடிந்ததா என்று கேட்க கணேசன் ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு அண்ணாவை அமரச் சொல்லி 90 பக்க வசனத்தையும் கேரக்டருக்கு தகுந்தாற் போல் குரல் மாற்றிப் பேசி அசத்திவிட்டார். அதே போல் மறுநாள் நாடகத்திற்கு தந்தை பெரியார் வர கணேசன் நடிப்பைப் பார்த்துப் பத்து நிமிடத்தில் செல்லாமல் முழு நாடகத்தையும் பார்த்து விட்டு மேடை ஏறி இங்கு சிவாஜியாக நடித்தது யார்? இனிமேல் உன் பெயர் கணேசன் அல்ல சிவாஜி கணேசன் என்று போட்டுக் கொள் என்றாராம். அப்படித் தான் நடிகர் கணேசன் சிவாஜி கணேசன் ஆனார். அந்த அண்ணா நாடகத்தின் பெயர் எம்.ஜி.ஆர் நடிக்க மறுத்த நாடகத்தின் பெயர் தான் அண்ணாவின் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் ஆகும்.

எம்.ஜி.ஆரால் தான் கலைஞர் முதல்வர் ஆனார் என்று இன்றும் சிலர் கூறுவது உண்டு. அன்று எம்.ஜி.ஆரும் கலைஞரை ஆதரித்தார் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் முரசொலி மாறன் தங்கள் வீட்டில் (கலைஞர்) மாமா முதல்வர் ஆவதை யாரும் விரும்பவில்லை என்று கூற தந்தை பெரியார் தான் அண்ணாவிற்கு பிறகு இந்த இயக்கத்திற்கு தலைமையேற்று உங்களால் தான் நடத்த முடியும் எனவே நீங்களே முதல்வராக இருங்கள் என்று கலைஞரை வற்புறுத்தி அமர வைத்தார்.

அப்படியானால் எம்.ஜி.ஆர் தி.மு.க வளர்ச்சிக்கு உழைக்கவில்லையா என்று எடப்பாடியார் கேட்பது புரிகிறது. உழைத்தார் இல்லையென்று மறுக்க முடியாது. அவரால் மட்டும் தான் தி.மு.க வளர்ந்தது என்பது தான் தவறு. அப்படி எம்.ஜி.ஆரால் தான் தி.மு.க வென்றதென்றால் 1962ல் அறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் ஏன் தோற்றார்? எம்.ஜி.ஆர் பிரச்சாரம் அங்கே ஏன் எடுபடவில்லை?

சுகாதாரத்துறை அமைச்சர் பதவி கேட்டார். சினிமாவில் நடிக்காமல் இருந்தால் அமைச்சராகலாம் என்று கலைஞர் கூறுகிறார். முடியாது என்கிறார் எம்.ஜி.ஆர். கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரம், மோகன் குமாரமங்களம், காங்கிரஸ் மற்றும் இன்கம் டாக்ஸ் போன்றவைகள் தான் எம்.ஜி.ஆரை கழகத்திலிருந்து பிரித்தன.

இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நடித்த நாடகத்தை தரையில் அமர்ந்துப் பார்த்து வாழ்த்தியவர் எம்.ஜி.ஆர் தான். கலைஞரின் தாய் கையில் தான் கலைஞரோடு சேர்ந்து அமர்ந்து இருவரும் உணவு உண்டு இருக்கிறோம். அந்த நாட்களை மறக்க முடியுமா என்று சொன்னவரும் எம்.ஜி.ஆர் தான். எம்.ஜி.ஆர் முதல்வராக இருக்கும் போது ஜேப்பியார் கலைஞரை கருணாநிதி என்று சொல்ல அவர் எனக்கும் தலைவராக இருந்தவர் அவர் பெயரை எப்படிச் சொன்னாய் என்று ஜேப்பியாரை காரை விட்டு இறக்கி விட்டவரும் எம்.ஜி.ஆர். தான்.

கலைஞர் அவர்கள் எம்.ஜி.ஆருக்கு செய்த உதவியை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். எம்.ஜி.ஆர் முதன்முதலில் கதாநாயகனாக நடித்த படம் ராஜகுமாரி. இதன் கதை வசன கர்த்தா யார் தெரியுமா? கலைஞர் தான். படம் 100 நாள். அதற்கு முன்பு 13 படங்களில் எம்.ஜி.ஆர் சிறு சிறு வேடங்களில் மட்டுமே நடித்து இருந்தார். கதாநாயகனாக அல்ல! இரண்டாவதாக எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்தப் படம் மருதநாட்டு இளவரசி. கதாநாயகி வி.என். ஜானகி. அதற்கும் கதை வசனம் கலைஞர் தான். அதுவும் 100 நாள். மூன்றாவது மந்திரிகுமாரி அதற்கும் கதை வசனம் கலைஞர் தான். அதன் இயக்குனர் எல்லீஸ்ஆர். டங்கன் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக நடிக்க வைக்க மறுத்து விடுகிறார். உடனே கலைஞர் மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரத்திடம் கதாநாயகன் எம்.ஜி.ஆர் இல்லையென்றால் நான் கண்டிப்பாக கதை வசனம் எழுத மாட்டேன் என்கிறார். பிறகு எம்.ஜி.ஆரை கதாநாயகனாக போட்டு படம் எடுக்கப்பட்டது படம் சூப்பர் ஹிட்.

இதற்கிடையில் அபிமன்யு என்று ஒரு படம். அதற்கும் கதை வசனம் கலைஞர் தான். அதில் இரண்டாவது கதாநாயகன் எம்.ஜி.ஆர் தான். அதற்கு அடுத்தப் படம் மலைக்கள்ளன். மூலக்கதை எழுதியவர் நாமக்கல் கவிஞர். கலைஞரோ காங்கிரஸ்காரரின் மூலக்கதைக்கு நான் கதை வசனம் எழுத மாட்டேன் என்று மறுத்துவிட்டு திருவாரூர் சென்று விடுகிறார். அதன்பின் எம்.ஜி.சக்கரபாணியும் எம்.ஜி.ஆரும் திருவாரூர் சென்று எங்களுக்காக இந்தப் படத்திற்கு நீங்களே கதை எழுதுங்கள் என்று கேட்டுக் கொள்ள கலைஞர் சம்மதித்து மலைக்கள்ளன் படத்திற்கு கதை வசனம் எழுதினார். அந்த படம் தான் எம்.ஜி.ஆருக்கு சூப்பர் சூப்பர் ஹிட். இந்த வரலாறெல்லாம் சிலருக்கு மட்டுமல்ல பலருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டுள்ளது.

உண்மையிலேயே தி.மு.க எம்.ஜி.ஆரால் மட்டும் தான் வளர்ந்தது என்றால் தனிக் கட்சி துவங்கி 1977ல் நடத்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் அ.தி.மு.க வெற்றி பெற்றிருக்க வேண்டுமே! அல்லது 1980 தேர்தலிலாவது 234 தொகுதிகளிலும் வெற்றிப் பெற்றதா? அல்லது எம்.ஜி.ஆர் நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் இருந்த போதும் இந்திரா காந்தி அம்மையார் சுட்டுக் கொல்லப்பட்டப் பிறகும் நடந்த 1984 தேர்தலிலாவது 234 தொகுதியிலும் வெற்றி பெற்றதா? கலைஞர் 1971 தேர்தலில் வெற்றி பெற்ற 184 இடங்களை கடைசிவரை எம்.ஜி.ஆரால் வெல்ல முடியவில்லையே. அறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர், கே.ஏ.மதியழகன் மற்றும் சில ஆண்டுகள் எம்.ஜி.ஆர் உட்பட பலரால் வளர்ந்த இயக்கம் தான் தி.மு.க. எனவே எடப்பாடியாரே இனியாவது அறிஞர் அண்ணாவைப் பற்றி பேச தி.மு.கவிற்கு மட்டுமல்ல யாருக்கும் அருகதையில்லை என்று கூறாதீர்கள். வடவர் அமித்ஷா வாய்ப்பிளந்து நிற்கிறார் என்றைக்கு வேண்டுமானாலும் ஏப்பம் விட்டு விடுவார் எச்சரிக்கிறோம்.

அறிஞர் அண்ணா ஒப்பீடில்லா அறிவுச் செம்மல் அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியா அல்லது ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவா என்று அ.தி.மு.க தொண்டர்கள் குலம்பிப் போய் நிற்கின்றனர். ஆம்! கடந்த வாரம் தினமலர் நாளிதழுக்கு அமித்ஷா தந்த பேட்டியில் NDA கூட்டணி ஆட்சி தான் தமிழகத்தில் 2026ல் அமையும். அதில் பா.ஜ.க பங்கும் நிச்சயம் இருக்கும் என்று தெளிவாகவும் அழுத்தமாகவும் கூறியிருந்தார்.

எதற்கெடுத்தாலும் உடனுக்குடன் தாம்! தூம் என தாண்டிக் குதிக்கும் எடப்பாடியார் இதனை மறுத்து ஒரு வார்த்தைக் கூட கூறவில்லை. இது இப்போது மட்டுமல்ல கடந்த முறை இப்படி அமித்ஷா கூறிய போதும் எடப்பாடியார் மௌனமாகத் தான் இருந்தார். அவரே அப்படி என்றால் மற்றவர்கள் என்ன மல்லுக்கட்டவா போகிறார்கள்.

என்றைக்கு முதல் நாள் வரை பா.ஜ.கவுடன் உறவுமில்லை ஒட்டுமில்லை என்று கூறிவிட்டு டெல்லி சென்று அமித்ஷாவைப் பார்த்தபின் பேச்சை நிறுத்திய எடப்பாடியார் நிரந்தரமாகவே நிறுத்திவிட்டார். மனிதப் புனிதரான இயேசுநாதருக்கே கட்டாரியையும், குத்துவாளையும் வைத்துக் கொண்டிருந்தவர்கள் உலகில் இருந்திருக்கிறார்கள். எடப்பாடியாருக்கு மட்டும் கட்டாரிகளும், குத்துவாள்களும் குறைவாகவா இருக்கப் போகிறது. இயேசு நாதருக்கோ ஒரு யூதாஸ். எடப்பாடியாருக்கு எத்தனை யூதாஸ்கலோ! அம்மையாரால் எச்சரித்து விரட்டப்பட்டவர்களில் சிலரை பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார். தி.மு.க என்ற திராவிடக் கட்சிக்கு எதிராக ஒரு திராவிடக் கட்சி தான் இருக்க வேண்டும். அதனால் தான் எச்சரிக்கை செய்ய வேண்டி இருக்கிறது.